# விரைவுக் குறியீட்டு வினாக்கள்

## செய்யுள் : 1. சிலப்பதிகாரம்

1. இந்திய நாட்டின் வடக்கிலுள்ள மலை

அ) சங்ககிரிமலை ஆ) ஆனைமலை

இ) விந்தியமலை **ஈ) மேருமலை**

2. திகிரி என்ற பெயர் கொண்ட பொருள்

அ) அம்மிக்கல் ஆ) உரல் **இ) சக்கரம்** ஈ) திரிகை

3. இரட்டைக்காப்பியங்கள் என்று அழைக்கப்படுபவை

அ) மணிமேகலையும் வளையாபதியும்

**ஆ) சிலப்பதிகாரமும் மணிமேகலையும்**

இ) சிலப்பதிகாரமும் குண்டலகேசியும்

ஈ) குண்டலகேசியும் வளையாபதியும்

4. 'வெள்ளை நிறம்' என்ற பொருள் தராத சொல்

அ) வெண்குடை **ஆ) வெந்நீர்** இ) வெள்ளுடை ஈ) வெண்ணிலவு

5. 'பெரிய' என்ற பொருள் கொண்ட ஓரெழுத்துச் சொல்

அ) கா ஆ) ஆ **இ) மா** ஈ) சா

6. 'அலர்தார்' என்னும் சொல்லின் பொருளைத் தேர்ந்தெடுக்க

அ) மலர்க்கொத்து ஆ) வாழைத்தார்

**இ) மலர்மாலை** ஈ) வாழைக்குலை

7. காவிரிநாடன் யார்?

அ) சேரமன்னன் **ஆ) சோழமன்னன்**

இ) பாண்டியமன்னன் ஈ) பல்லவமன்னன்

8. நிலவு, மாதம், ஒரு கிழமையின் பெயர் - இம்மூன்றையும் குறிக்கும் சொல்.

அ) மதி **ஆ) திங்கள்** இ) புதன் ஈ) சந்திரன்

9. 'அங்கண்' – பிரித்து எழுதும் முறை

**அ) அம்+கண்** ஆ) அங் +கண் இ) அங்கு+கண் ஈ) அ+கண்

10. ஞாயிறு சுடும் நடுப்பகலில் நீங்கள் இளைப்பாற நினைக்கும் இடம்

அ) தன்னிழல் ஆ) செடிநிழல் **இ) மரநிழல்** ஈ) மனிதநிழல்

# செய்யுள் : 2. காணிநிலம்

1. குயிலோசை என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது

   அ) குயில்+ஆசை ஆ) குயிலோ+ஓசை இ) குயி+லோசை ***ஈ) குயில்+ஓசை***

2. பொருந்தாத மோனை இணையைத் தேர்ந்தெடுக்க.

   அ) நிறம் - நிலம் ஆ) மாடம் - மாளிகை

   ***இ) என்றும் - நன்றாய்*** ஈ) முத்து - முன்பு

3. நில அளவையைக் குறிக்கும் சொல்

   அ) வல்லம் ***ஆ) காணி*** இ) குன்றிமணி ஈ) குறுணி

4. பாரதியாருக்கு 'பாரதி' என்ற பட்டம் வழங்கியவர்

   அ) ஆசிரியர் ஆ) தந்தையார்

   இ) படித்துப் பெற்றது ***ஈ) எட்டயபுரத்து மன்னர்***

5. 'காணிநிலம்' பாடலில் பாரதியார் குறிப்பிடும் தென்னைமரத்தின் உறுப்புப் பெயர்

   அ) இலை ஆ) ஓலை இ) தோகை ***ஈ) கீற்று***

6. நீங்கள் வீடு கட்டும் நிலத்தின் நடுவில் ஒரு பெரிய பசுமையான வேப்பமரம் உள்ளது. நீங்கள் என்ன செய்வீர்கள்?

   ***அ) மரத்திற்குப் பாதிப்பின்றி வீடு கட்டுவேன்.***

   ஆ) மரத்தை வெட்டி கதவு, சாளரம் செய்வேன்

   இ) மரத்தை வெட்டி விற்று விடுவேன்

   ஈ) மரத்தை அகற்றி விட்டு வீடு கட்டுவேன்.

7. படத்திலுள்ள பறவையின் ஒலிமரபுச் சொல்லைத் தேர்ந்தெடுக்க



   அ) கத்தும் ஆ) அலறும்

   ***இ) கூவும்*** ஈ) கொஞ்சும்

8. பாரதியார் எழுதியநூல்

   அ) இருண்டவீடு ***ஆ) பாஞ்சாலி சபதம்***

   இ) குறிஞ்சித்திட்டு ஈ) அழகின் சிரிப்பு

9. கீழ்க்காணும் சூழல்களில் நீங்கள் விரும்பாதது எது?

   அ) இனிய, தெளிந்த நீரை உடைய நீரோடை

   ஆ) கூவும் குயிலும் நறுமணம் வீசும் பூக்களும் நிறைந்த அடர்ந்த சோலை

   ***இ) மூக்கினால் முகரவியலாத நாற்றமடிக்கும் நீர்நிலை***

   ஈ) விண்ணை முட்டும் பசுமையான மரங்களுள்ள கானகம்.

10. இளம்+தென்றல் - சேர்த்தெழுதக் கிடைப்பது

   அ) இளம்தென்றல் ஆ) இத்தென்றல்

   ***இ) இளந்தென்றல்*** ஈ) இளமைத்தென்றல்

# உரைநடை : சிறகின் ஓசை

1. பறவைகள் இடம் பெயர அடிப்படையாக இருப்பவை

அ) விலங்குகள், விண்மீன்கள், விமானங்கள்

ஆ) காற்று, பறவைகள், கடல்

***இ) நிலவு, விண்மீன், புவிஈர்ப்புப்புலம்***

ஈ) கட்டிடங்கள், மலைகள், மரங்கள்

2. இந்தியாவின் பறவை மனிதர்

அ) டாக்டர் அப்துல்கலாம் ஆ) டாக்டர் ஆசிப்அலி

இ) டாக்டர் இராதாகிருஷ்ணன் ***ஈ) டாக்டர் சலீம் அலி***

3. சிட்டுக்குருவிகளின் வாழ்நாள்

அ) பன்னிரண்டு முதல் பதினைந்து ஆண்டுகள்

***ஆ) பத்து முதல் பதின்மூன்று ஆண்டுகள்***

இ) பத்து முதல் பன்னிரண்டு ஆண்டுகள்

ஈ) பன்னிரண்டு முதல் பதினான்கு ஆண்டுகள்

4. பொருத்தமற்றதைத் தேர்ந்தெடுக்க. பறவைகளால் நமக்குக் கிடைக்கும் நன்மைகள்.

அ) விதைகளைப் பரப்புகின்றன ஆ) புழு, பூச்சிகளை உண்கின்றன

இ) பருவநிலை மாற்றம் உணர்த்துகின்றன ***ஈ) பறவைக் காய்ச்சலைப் பரப்புகின்றன***

5. தரையிறங்காமல் நானூறு கிலோமீட்டர் வரை பறக்கும் பறவை

அ) நீர்க்காகம் ***ஆ) கப்பல் கூழைக்கடா***

இ) கடல்புறா ஈ) கழுகு

6. ‘தென்திசை’ என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது

***அ) தெற்கு+திசை*** ஆ) தெ+திசை இ) தேன்+திசை ஈ) தென்+திசை

7. ஐரோப்பாவின் இருந்து தமிழகத்திற்கு வரும் பறவையினம்

அ) நீர்நாரை ஆ) கரண்டிவாயன் இ) மஞ்சள்சிட்டு ***ஈ) செங்கால்நாரை***

8. சிட்டுக்குருவிகளைப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டியது

அ) செயற்கை வேலிகளை அமைத்தல்

***ஆ) ஆல், அரசு போன்ற மரங்களை வளர்த்தல்***

இ) புதர்ச்செடிகளை அழித்தல்

ஈ) பூச்சிக்கொல்லி மருந்துகள் பயன்படுத்துதல்

9. பொருத்தமற்றது எது? வலசையின் போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள்

அ) உடலில் கற்றையாக முடிவளர்தல் ***ஆ) கண் வளர்ச்சி ஏற்படுதல்***

இ) தலையில் சிறகு வளர்தல் ஈ) இறகுகளின் நிறம் மாறுதல்

10. உலகச் சிட்டுக்குருவிகள் நாள்

அ) ஏப்ரல் - 20 ஆ) ஏப்ரல் - 8 இ) மார்ச் - 8 ***ஈ) மார்ச் - 20***

# விரிவானம் : கிழவனும் கடலும்

1. 'கிழவனும் கடலும்' என்ற கதையின் நாயகன்

   அ) எர்னெஸ்ட் **ஆ) சாண்டியாகோ** இ) ஹெமிங்வே ஈ) மனோலின்

2. 'கிழவனும் கடலும்' கதைக்குப் பொருத்தமான மற்றொரு தலைப்பு

   அ) கடலின் கோபம் **ஆ) தன்னம்பிக்கைத் தாத்தா**

   இ) உடைந்த கப்பல் ஈ) கடலும் மேகமும்

3. கீழுள்ளவற்றுள் இயற்கை அல்லாதது

   அ)  **ஆ)** 

   இ)  ஈ) 

4. சாண்டியாகோ கீழ்க்காணும் குணத்தை உடையவர்

   **அ) விடாமுயற்சி** ஆ) முன்கோபம் இ) சுயநலம் ஈ) சோம்பல்

5. பொருத்தமற்றதைத் தேர்ந்தெடுக்க. சாண்டியாகோவைப் பார்த்துச் சிறுவன் கற்றுக் கொண்ட நற்பண்பு

   அ) தொழில் திறமை ஆ) தன்னம்பிக்கை

   இ) விடாமுயற்சி **ஈ) கொடைப்பண்பு**

6. சாண்டியாகோ மீன் பிடிக்கப் பயன்படுத்திய கருவி

   அ) துணி **ஆ) தூண்டில்** இ) மீன்வலை ஈ) மூங்கில் கூடை

7. சாண்டியாகோ ஒரு

   அ) படகோட்டி **ஆ) மீனவர்** இ) மாலுமி ஈ) கடல் பயணி

8. இக்கதைக்குரிய பொருத்தமற்ற பழமொழியை தேர்ந்தெடுக்க

   அ) விடாமுயசியே வெற்றிக்கு வழி **ஆ) ஆற்றில் போட்டாலும் அளந்து போடு.**

   இ) உழைப்பே உயர்வு ஈ) முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.

9. கிழவனும் கடலும் என்ற கதையின் மூலநூல் பெற்ற பரிசு

   அ) புக்கர் பரிசு ஆ) ஹ்யுகோ பரிசு **இ) நோபல் பரிசு** ஈ) புலிட்சர் பரிசு

10. சாண்டியாகோவிற்கு எத்தனை நாள்கள் கழித்து மீன் கிடைத்தது?

    அ) எண்பத்து நான்கு **ஆ) எண்பத்தைந்து**

    இ) எண்பத்தாறு ஈ) எண்பத்தேழு

# செய்யுள் : திருக்குறள்

1. மழை எப்படிப் பெய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்கள்?
   அ) வெள்ளப்பெருக்கு ஏற்படும்வண்ணம் பெய்தல்
   ஆ) உரிய காலத்தில் மிகக் குறைவாக பெய்தல்
   **இ) உரிய காலத்தில் அளவாகப் பெய்தல்**
   ஈ) உரிய காலத்தில் பெய்யாது பொய்த்தல்
2. ‘பெரிது+உவக்கும்’ சேர்த்து எழுதக் கிடைப்பது
   அ) பெரியஉவக்கும் ஆ) பெரிஉவக்கும் இ) பெரிதுஉவக்கும் **ஈ) பெரிதுவக்கும்**
3. பொருத்தமற்றதைத் தேர்ந்தெடுக்க.
   அ) அன்பில்லாதவர் - தன்னலம் மிக்கவர் ஆ) அன்புடையவர் - பிறர் நலம் நாடுபவர்
   **இ) அன்பில்லாதவர் - பிறருக்கு உதவுபவர்** ஈ) அன்புடையவர் - உயிருள்ள உடல்
4. தொடர்பற்றதைத் தேர்ந்தெடுக்க. திருவள்ளுவருக்குரிய சிறப்புப் பெயர்கள்
   அ) செந்நாப்போதார் ஆ) தெய்வப்புலவர்
   **இ) காளமேகப்புலவர்** ஈ) பொய்யில் புலவர்
5. பொருத்தமற்றதைத் தேர்ந்தெடுக்க.
   அ) இனிய கனிகள் - மாம்பழம், பலாப்பழம்
   ஆ) சிறந்த பண்புகள் - பணிவு, இன்சொல்
   இ) இனிய சொற்கள் - வணக்கம், நன்றி
   **ஈ) இன்னாத சொற்கள் - வாருங்கள், அமருங்கள்**
6. ‘செயற்கரிய’ பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) செயற்+கரிய **ஆ) செயற்கு+அரிய** இ) செயல்+அரிய ஈ) செய+கரிய
7. ‘மன்னுயிர்’ என்பதன் பொருள்
   **அ) நிலைத்த உயிர்** ஆ) நிலையற்ற உயிர்
   இ) மன்னனின் உயிர் ஈ) மண்ணில் வாழும் உயிர்
8. வள்ளுவர் கூறும் பெரியோர் எனப்படுவர்
   அ) முடியாது என்று கூறுபவர் **ஆ) முடியாத செயலை முடித்துக் காட்டுபவர்**
   இ) முயற்சியே செய்யாதவர் ஈ) முடியும் என்று கூறி முடிக்காதவர்
9. பொருளோடு பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| i. | விரிநீர் | அ. | கடல் |
| ii. | பகவன் | ஆ. | மகிழும் |
| iii. | என்பு | இ. | இறைவன் |
| iv. | உவக்கும் | ஈ. | வானம் |
| | | உ. | எலும்பு |

**விடைகள்**

**i. அ) கடல்**
**ii. இ) இறைவன்**
**iii. உ) எலும்பு**
**iv. ஈ) வானம்**

10. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| i. | கவர்ந்தற்று | அ. | பணிவு+உடைய |
| ii. | கனியிருப்பு | ஆ. | கவர்ந்து+அற்று |
| iii. | பணிவுடைய | இ. | அணி + அல்ல |
| iv. | அணியல்ல | ஈ. | கனி + இருப்ப |

**விடைகள்**

**v. ஆ) கவர்ந்து + அற்று**
**vi. இ) கனி + இருப்ப**
**vii. உ) பணிவு + உடைய**
**viii. ஈ) அணி + அல்ல**

# கற்கண்டு : முதலெழுத்தும் சார்பெழுத்தும்

1. எழுத்துகளின் இரண்டு வகைகள்

    அ) உயிர்மெய் எழுத்து, ஆய்த எழுத்து

    ஆ) உயிரெழுத்து, ஆய்த எழுத்து

    இ) உயிரெழுத்து, மெய்யெழுத்து

    ***ஈ) முதல் எழுத்து, சார்பெழுத்து***

2. 'அரங்கேற்றம்' இச்சொல்லில் உள்ள முதலெழுத்துகள்

    அ) ர,கே,ற,அ ஆ) ர்,ற்,க,ம இ) ங,ற்,ம,க ***ஈ) அ,ங்,ற்,ம்***

3. பிற எழுத்துகள் தோன்றவும் இயங்கவும் காரணமாக இருப்பவை

    அ) வழி எழுத்துகள் ஆ) சார்பெழுத்துகள் இ) துணையெழுத்துகள் ***ஈ) முதல் எழுத்துகள்***

4. சார்பெழுத்துகளின் வகைகள்

    அ) இரண்டு ஆ) பதினெட்டு இ) பன்னிரண்டு ***ஈ) பத்து***

5. முதல் எழுத்து இடம்பெறாத சொல்லைக் கண்டறிக.

    ***அ) பாடு*** ஆ) ஆடு இ) ஈடு ஈ) ஓடு

6. உயிர்மெய் எழுத்தை ஒலிக்கும் கால அளவு

    அ) தனியளவு உடையது ஆ) மெய்யெழுத்தை ஒத்திருக்கும்

    ***இ) உயிரெழுத்தை ஒத்து இருக்கும்*** ஈ) ஆய்த எழுத்தை ஒத்திருக்கும்

7. ஆய்த எழுத்து சொல்லின்

    அ) தனித்து வரும் ஆ) முடிவில் வரும்

    இ) முதலில் வரும் ***ஈ) இடையில் வரும்***

8. கீழ்க்காணும் எழுத்துகளில் சார்பெழுத்து அல்லாதது

    ***அ) மெய்*** ஆ) ஐகாரக்குறுக்கம் இ) உயிர்மெய் ஈ) ஆய்தக்குறுக்கம்

9. பொருத்தமற்றதைத் தேர்ந்தெடுக்க. ஆய்த எழுத்தின் வேறுபெயர்கள்

    அ) முப்புள்ளி ஆ) முப்பாற்புள்ளி இ) தனிநிலை ***ஈ) முற்றுப்புள்ளி***

10. சார்பெழுத்து இடம்பெறாத சொல்லைக் கண்டறிக.

    அ) காண் ஆ) கண் ***இ) ஆண்*** ஈ) பெண்

********